**செ.கு.எண் :33** **நாள் : 05.04.2022**

**<u>மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி</u>**

ஊடகத் துறையில் ஒளிப்பதிவாளராக நீண்ட அனுபவமும், புது தில்லியில் சன் தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளராக பல ஆண்டு காலம் பணிபுரிந்துள்ள மூத்த ஒளிப்பதிவாளர் திரு.ஜி.குமார் அவர்கள் உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார் என்ற செய்தியறிந்து மன வருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**